# ஆயரின் அறிவிப்பு

அன்பிற்கினிய அருள்பணியாளர்களே, பொதுநிலை இறைமக்களே,

ஆண்டவர் இயேசுவின் அன்பும் அருளும் உங்களோடு இருப்பதாக!

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் சிறந்த விழுமியங்களான அன்புறவு, பங்கேற்பு, கூட்டுப் பொறுப்பு ஆகியவற்றின் அடிப்படையிலான திருஅவைச் சட்டங்களின் வழிகாட்டுதல்களுக்குட்பட்டு நமது மறைமாவட்டத்தின் பங்குகளில் பங்கு அருள்பணிப் பேரவை, பங்கு நிதிக்குழு ஆகிய பங்கேற்பு அமைப்புகள் உருவாக்கப்பட்டன. அருள்பணியாளர்களும் பொதுநிலை இறைமக்களும் இணைந்து பங்கு சமூகத்தின் வளர்ச்சிக்காக ஒன்றுபட்டுச் செயல்படுவதற்கு இப்பங்கேற்பு அமைப்புகள் சிறப்பாகப் பங்களிப்புச் செய்திருக்கின்றன என்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

நமது கோட்டாறு மறைமாவட்டத்தில் 1973இல் பங்கு அருள்பணிப் பேரவை விதிமுறைகள் வெளியிடப்பட்டு, பின்னர் காலத்தின் தேவைக்கு ஏற்ப 1990, 1997, 2010, 2013 ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்ட விதிமுறைகள் வெளிவந்ததும் அதனடிப்படையில் நமது பங்குகளில் பங்கு அருள்பணிப் பேரவைகளும் பங்கு நிதிக்குழுக்களும் அமைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வந்திருப்பதும் நாம் அறிந்ததே.

இந்நிலையில், அண்மைக்கால அனுபவங்களின் அடிப்படையில் பங்கு அருள்பணிப் பேரவை, பங்கு நிதிக்குழு ஆகியவற்றின் விதிமுறைகளில் சில மாற்றங்கள் தேவை என நம்மால் பெரிதும் உணரப்பட்டதால் மறைமாவட்ட அருள்பணியாளர்கள், துறவியர், பொதுநிலை இறைமக்கள் ஆகியோரைப் பல மட்டங்களில் கலந்து ஆலோசித்த பின் அவர்களது பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு 2013 முதல் நடைமுறையிலிருக்கும் பங்கு அருள்பணிப் பேரவை, பங்கு நிதிக்குழு ஆகியவற்றின் விதிமுறைகளில் சில திருத்தி அமைக்கப்பட்டு 'பங்கு அருள்பணிப் பேரவை, பங்கு நிதிக்குழு விதிமுறைகள் 2025' என்னும் ஏடு ஆகஸ்ட் 15, 2025 அன்று அன்னை மரியாவின் விண்ணேற்புப் பெருவிழா நாளில் கோட்டாறு புனித சவேரியார் பேராலயத்தில் வெளியிடப்பட்டது.

இந்த விதிமுறைகள் நவம்பர் 01, 2025 முதல் நடைமுறைக்கு வருகின்றன என்பதால் மறைவட்ட முதன்மை அருள்பணியாளர்களும் பங்கு

அருள்பணியாளர்களும் மறைவட்ட, மறைமாவட்டப் பொதுநிலையினர் பணிக்குழுவினருடன் இணைந்து இவ்விதிகளை இறைமக்களுக்கு அறிவித்து விளக்கிக் கொடுக்கும் பணியை பல்வேறு நிலைகளில் திட்டமிட்டுச் செயல்படுத்திட அன்போடுக் கேட்டுக்கொள்கின்றேன்.

நமது பங்குகளில் புதிதாக அமையவிருக்கும் பங்கு அருள்பணிப் பேரவைகளும் பங்கு நிதிக்குழுக்களும் இனி இவ்விதிகளுக்குட்பட்டே அமைக்கப்பட வேண்டும். எனவே, இறைமக்கள் அனைவரும் இவ்விதிகளைத் தெரிந்துகொள்ளவும் புதிய பங்கு அருள்பணிப் பேரவை, பங்கு நிதிக்குழு ஆகியவைகள் முறையாக அமைக்கப்படவும் தங்கள் ஒத்துழைப்பை நிறைவாகத் தர அன்புடன் பணிக்கின்றேன்.

இயேசுவின் சீடர்களோடு இணைந்து தொடக்கக்கால திருஅவையில் பங்கேற்பு அமைப்பினை உருவாக்கிச் செயல்பட்ட அன்னை மரியாவின் அருள்துணை நம்மோடு இருப்பதாக!

கிறிஸ்துவின் மனநிலையில்,

Sd/-

**ஆயர் நசரேன் சூசை**
(கோட்டாறு மறைமாவட்டம்)

---

**குறிப்பு :** இவ்வறிக்கை ஆகஸ்ட் 24, 2025, ஞாயிறு திருப்பலி அறிவிப்பின் போது இறைமக்களுக்கு வாசித்து அறிவிக்கப்பட வேண்டும்.